MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :8 /Issue 8 / MAY 2026 E-ISSN 3049-3676 (Online)

மேன்மதி கோவை தமிழ் மன்றம்

சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்

MENMATHI KOVAI TAMIL MANDRAM

INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS

சங்க இலக்கியத்தில் நாய்: உணவுசார் குறிப்புகள்

முனைவர் ம. ஆதித்தசோழன்,
உதவிப்பேராசிரியர், அறிவியல் மற்றும் மனிதநேயத்துறை,
தானிஷ் அகமது தொழில்நுட்பக் கல்லூரி, கோயம்புத்தூர் - 05,
athiththachozhan@gmail.com, அழைப்பு : 76397 81632.

க. விஜயலெட்சுமி,
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை,
பாரதியார் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர்- 46, gvijayalakshmi17102000@gmail.com,
அழைப்பு : 63830 13537.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :8 /Issue 8/ MAY 2026 E-ISSN 3049-3676 (Online)

Dog Foods in Sangam Literature

Dr. M. Athiththachozhan,
Assistant Professor,
Department of Science and Humanities,
Dhaanish Ahmed Institute of Technology,
Coimbatore -05. athiththachozhan@gmail.com,
Contact No : 76397 81632.

G. Vijayalakshmi,
Research Scholor, Department of Tamil,
Bharathiar University, Coimbatore -46.
gvijayalakshmi17102000@gmail.com,
Contact No : 63830 13537.

Abstract

Animals play an important role in the ecosystem. The search for food in human society, the hunting for food for the survival of other species is recorded by the Tamil Poets, on the basis of a natural law called the 'food chain'. Thus, the purpose of this article is to explore the dietary habits of two different carnivores, the otter and the wolf, featured in the Sangam hymns. The otters that live in the waters of the desert, hunting and eating swordfish as their morning food, can be learned from the books such as the Aynkurunooru. It describes the body adaptations of the otter, its swimming patterns, and the biological mechanisms by which it lives and sleeps in tree trunks. On the other hand, Sangam Literature exhibits the ways in which wolves, which hunt in hordes on the ground, attack and kill wild boar and deer with their sharp teeth. In particular, the ecological bonding of the male wolf in search of a mating and offspring has been analyzed in detail through hundreds of songs. With such references, the article demonstrates how closely the Tamils of the Sangam period observed the behaviour and ecological backgrounds of animals.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :8 /Issue 8/ MAY 2026 E-ISSN 3049-3676 (Online)

Key Words

Otter, Coyote, Fish.

ஆய்வுச்சுருக்கம்

சங்க இலக்கியங்கள் காட்டும் இயற்கைச் சூழலியலில் விலங்குகளின் பங்கு இன்றியமையாதது. மனித சமூகத்தின் உணவுத் தேடலைப் போலவே, பிற உயிரினங்களின் பிழைப்புக்கான உணவு வேட்டையையும் சங்கப் புலவர்கள் 'உணவுச் சங்கிலி" என்னும் இயற்கை விதியின் அடிப்படையில் பதிவு செய்துள்ளனர். அவ்வகையில், சங்கப் பாடல்களில் இடம்பெற்றுள்ள நீர்நாய் மற்றும் செந்நாய் ஆகிய இருவேறு மாமிச உண்ணிகளின் உணவு சார் பழக்கவழக்கங்களை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். மருத நிலத்து நீர்நிலைகளில் வாழும் நீர்நாய்கள், வாளை மீன்களைத் தங்களின் விடியற்கால உணவாக, வேட்டையாடி உண்பதை ஐங்குறுநூறு, அகநானூறு போன்ற நூல்கள் வழி அறிய முடிகிறது. நீர்நாயின் உடல் தகவமைப்பு, நீந்தும் முறை மற்றும் அவை தில்லை மரப்பொந்துகளில் தங்கி உறங்கும் வாழ்வியல் நுட்பங்கள் இதில் விளக்கப்பட்டுள்ளன. மற்றொரு புறம், நிலப்பரப்பில் கூட்டமாக வேட்டையாடும் செந்நாய்கள், தங்களின் கூர்மையான பற்களால் காட்டுப்பன்றி மற்றும் மான்களைத் தாக்கி வீழ்த்தும் முறைகளைச் சங்க இலக்கியங்கள் காட்சிப்படுத்துகின்றன. குறிப்பாக, பசியால் வாடும் தன் பிணவு மற்றும் குட்டிகளுக்காக ஆண் செந்நாய் இரை தேடி வரும் சூழலியல் பிணைப்பு அகநானூற்றுப் பாடல்கள் வழி விரிவாகப் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :8 /Issue 8/ MAY 2026 E-ISSN 3049-3676 (Online)

இத்தகைய குறிப்புகள் மூலம், சங்க காலத் தமிழர்கள் விலங்குகளின் நடத்தை மற்றும் சூழலியல் பின்னணிகளை எவ்வளவு நுட்பமாகக் கவனித்துள்ளனர் என்பதை இக்கட்டுரை மெய்ப்பிக்கின்றது.

கலைச்சொல்

நீர்நாய், செந்நாய், வாளை மீன்.

முன்னுரை

சங்க இலக்கியங்கள் காட்டும் வாழ்வியல் என்பது மனிதர்களுக்குச் சார்ந்தது மட்டுமன்றி, அவற்றுடன் இணைந்து வாழ்ந்த பிற உயிரினங்களின் சூழலியலையும் உள்ளடக்கியதாகும். சங்க காலத் தமிழர்கள், தங்களின் உணவுத் தேவைகளைப் பூர்த்தி செய்யப் பல்வேறு வாழ்வியல் நெறிமுறைகளைக் கையாண்டனர். மனித சமூகத்தின் நீடித்த வாழ்விற்கு உணவுத் தேடல் எவ்வாறு முதன்மை அங்கமாகத் திகழ்ந்ததோ, அவ்வாறே பிற உயிரினங்களின் வாழ்விற்கும் உணவு என்பது அடிப்படைத் தேவையாக விளங்கியது. இவ்வுலகில் மனிதர் உள்ளிட்ட அனைத்து உயிரினங்களுமே தங்களைவிட வலிமை குறைந்த பிற உயிரினங்களைத் தங்களுக்குரிய உணவாகக் கொள்ளும் இயல்புடையவை. இயற்கையின் இந்நியதியை நாம் 'உணவுச் சங்கிலி" என்கிறோம். சங்க இலக்கியம் காட்டும் ஐவகை நில அமைப்பிலும் பல்வேறு வகையான உயிரினங்கள் தங்களுக்குரிய வாழ்வியல் தகவமைப்பைப் பெற்றிருந்தன. இவ்வுயிரினங்களின் உணவுத் தேவைகளும், அவற்றை எதிர்கொள்ளும் தேடல் முறைகளும் நிலத்திற்கு நிலம் மாறுபட்டும் தனித்துவம் மிக்கதாகவும் விளங்கின.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :8 /Issue 8/ MAY 2026 E-ISSN 3049-3676 (Online)

ஒவ்வொரு விலங்கும் ஒரு குறிப்பிட்ட வகையான உணவினை உட்கொள்ளும் தனித்த இயல்பைக் கொண்டுள்ளன. அவற்றுள் சில தாவர உண்ணிகளாகவும், சில விலங்குண்ணிகளாகவும் காணப்படுவதுடன், திணை நில அமைப்பிற்கு ஏற்ப இவ்வுயிரினங்களின் வேட்டை முறைகளும் வேறுபடுகின்றன. இவற்றுள் விலங்குசார் உணவுத் தேடலை நிலத்தில் வாழும் மாமிச உண்ணிகள், நீரில் வாழும் மாமிச உண்ணிகள் என இரு நிலைகளில் பகுக்கலாம். நீரில் வாழக்கூடிய மீன் இனங்களைத் தன் விருப்பத்திற்குரிய முதன்மை உணவாகக் கொண்டு வேட்டையாடி உண்ணும் இயல்புடையதாக நீர்நாயும், நிலப்பரப்பில் வாழும் மாமிச உண்ணியாகக் காடுகளிலும் புதர்களிலும் கூட்டமாகச் சென்று பிற விலங்குகளை வேட்டையாடித் தன் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்யும் இயல்புடையதாகச் செந்நாயும் விளங்குகின்றன. சங்க இலக்கியப் பாடல்களில் விலங்குகளின் உணவு முறைகள், வேட்டையாடும் நுட்பங்கள் மற்றும் அவற்றின் சூழலியல் பின்னணிகள் மிக நுட்பமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன. அவ்வகையில், ஐந்திணை நிலப்பரப்பில் வாழ்ந்த நீர்நாய் மற்றும் செந்நாய் ஆகிய விலங்குகளின் உணவுத் தேடல் மரபுகளையும், அவை சங்க நூல்களில் எவ்விதம் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன என்பதையும் விரிவாக ஆராய்வதே இக்கட்டுரையின் முதன்மை நோக்கமாகும்.

நீர்நாய்

நீர்நாய் என்பது நீரில் வாழத் தன்னை ஓரளவு தகவமைத்துக் கொண்ட ஒருவகைப் பாலூட்டி விலங்கு ஆகும்.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்

Volume :8 /Issue 8/ MAY 2026 E-ISSN 3049-3676 (Online)

பொதுவாக நீர்நாய்கள் மீன்கள், சிறிய நில நீர்வாழிகள், பறவைகள் முதலியவற்றை உணவாக உட்கொள்கின்றன. இதில் "மொத்தம் 13 சிற்றினங்கள் காணப்பட்டுள்ளன. இந்நாய்கள் மெலிந்த நீண்ட உடல்வாகினைப் பெற்றுள்ளன. நீரில் செல்ல ஏதுவாக பாதங்களில் சவ்வுகளும், வேட்டையாட உதவியாக கூர்மையான நகங்களும் காணப்படுகிறது. கடல் நீர்நாயைத் தவிர மற்ற சிற்றினங்கள் நீண்ட, உறுதியான வாலினைப் பெற்றுள்ளன"1. இவை மிகவும் சுறுசுறுப்பான, விளையாட்டுத்தனம் கொண்ட விலங்குகளாகவும் மற்றும் கூச்ச சுபாவம் கொண்டவையாகவும் இருப்பதால் மனிதர்களைக் கண்டால் ஒளிந்துகொள்ளும் இயல்பை பெற்றுள்ளது. நீர் நாய்கள் காஷ்மீர், இமயமலைப் பகுதிகள், தென்னிந்தியா ஆகிய பகுதிகளில் காணப்படுகின்றன. இந்தியாவில் வேறு இடங்களில் காணப்படுவதில்லை. "நீர்நாயின் உடல் நீண்டு, எளிதில் நெளிந்து வளையும் வகையிலும், நீரில் விரைவாக மூழ்கி நீந்தும் வகையிலும் அமைந்து உள்ளது. இதன் தலையும் உடலும் சேர்ந்து 60 - 80 செ.மீ. நீளமும் வால் சுமார் 45 செ.மீ. நீளமும் உள்ளது. உடலின் மீது சொர சொரப்பான மயிர்கள் உள்ளன. இம் மயிர்கள் மங்கிய பளபளப்பாக உள்ளன."2 இதன் அடர்ந்த வெளி மயிர்களும் உள் மயிர்களும் உடலில் நீர் படியாதபடி காக்கின்றன. இதன் வால் தடித்துள்ளது. பின்னங்கால்கள் முன்னங்கால்களைக் காட்டிலும் சற்றுப் பெரியனவாக உள்ளன. இக் கால்கள் துடுப்பு போன்று நீரில் நீந்துவதற்கு உதவுகின்றன. நீரினுள் மூழ்கியிருக்கும்போது காதுகளினுள்ளும், மூக்கினுள்ளும் நீர் செல்லாத வகையில், காதுகள் மிகச் சிறியனவைகளாகவும், மூக்குத் துவாரங்கள் வால்வுகளால் மூடப்பட்டும் உள்ளன.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்

Volume :8 /Issue 8/ MAY 2026 E-ISSN 3049-3676 (Online)

முகத்தின் நுனியில் உள்ள தடித்த நீண்ட உணர் மயிர்கள் இவைகள் நீரினுள் இருக்கும் பொழுதும் வளையாமல் நிமிர்ந்துள்ளன. நீரில் மீன்களைக் கண்டு துரத்திச் சென்று அவற்றைப் பிடிக்கும் வகையில் அதற்குக் கூரிய பார்வையுள்ளது. இவைகள் மலையருவிகளிலும், ஏரிகளிலும் காணப்படுகின்றன. கரைகளின் அருகில் உள்ள பாறைச் சந்துகளிலும், மரவேர்களின் சந்துகளிலும், நாணல் புதர்களிலும் தங்குகின்றன. சங்க இலக்கியத்தில் நீர்நாய்கள் காணப்படுகின்றன. அவை காலை உணவாக வாளை மீனை உண்ணுகின்றன. இதனை.,

“அரில் பவர்ப் பிரம்பின் வரிப்புற நீர்நாய்

வாளை நாள்இரை பெறூஉம் ஊரான்”[3]

பின்னிக் கிடக்கும் பிரப்பங்கொடியைப் போன்ற வரிகளையுடைய, கோடுகள் பொருந்திய முதுகையுடைய நீர்நாய் தனக்குரிய காலை உணவாக வாளை மீனை உண்ணுவதாக புலவர் கூறுகிறார்.

“நாள்இரை தரீ இய எழுந்த நீர்நாய்

வாளையொடு உழப்ப, துறைகலுழ்ந் தமையின்,”4

அகன்ற இலையோடு கூடிய பாசிபடர்ந்த நீர்ப்பரப்பில், பெண் நீர்நாய் தன் குட்டியுடன் இரையை உண்ணாமல் வருந்திக் கிடந்தது. அதன் வருத்தத்தைப் போக்குவதற்கு ஆண் நீர்நாயானது இரையைக் கொண்டு வருவதற்காகக் காலைப் பொழுதில் எழுந்தது. நீர்நிலையிலுள்ள வாளை மீனைக் கவ்வி தன்துணையோடு போரிட்டு உண்ணுவதாக இப்பாடல் அமைந்துள்ளது.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :8 /Issue 8/ MAY 2026 E-ISSN 3049-3676 (Online)

"பொய்கை நீர்நாய்ப் புலவுநாறு இரும்போத்து

வாளை நாள்இரை தேரும் ஊர,"5

புலால் நாறும், பொய்கையிலுள்ள வாளைமீனை ஆண் நீர்நாய் விடியற் காலத்தே இரையாக உண்ணுவதாக இப்பாடல் அமைந்துள்ளது.

"................ - இருங் கழிக்

குருளை நீர்நாய் கொழு மீன் மாந்தி,

தில்லைஅம் பொதும்பில் பள்ளி கொள்ளும்"6

கருமை பொருந்திய உப்பங்கழியில் உள்ள நீர்நாயின் இளங்குட்டி கொழுமையான மீன்களை நிரம்பத் தின்று தில்லை மரப் பொந்துகளில் படுத்துக்கிடக்கும். நற்றிணைப் பாடலில் நீர்நாய்கள் மரப்பொந்துகளில் வாழுவதை அறிய முடிகின்றது.

"வாளை வாளின் பிறழ, நாளும்

பொய்கை நீர்நாய் வைகுதுயில் ஏற்கும்"7

வாளை மீனை வாள் போல் பிறழும்படி விட்டுவிட்டுப் பொய்கையில் நீர்நாய் இன்பமாகத் தூங்கும். நீர்நாய்கள் நீரில் உறங்குவதை நற்றிணைப் பாடலின் மூலம் அறிய முடிகின்றது.

"பொய்கைப் பள்ளிப் புலவு நாறு நீர்நாய்

வாளை நாள் இரை பெறூஉம் ஊரே"8

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்

Volume :8 /Issue 8/ MAY 2026 E-ISSN 3049-3676 (Online)

பொய்கையில் புலால் நாற்றம் வீசும். நீர்நாயானது வாளைமீன் இரையாக உண்ணும்.

“வாளை நீர் நாய் நாள் இரை பெறூஉப்

பௌவ உறை அளவா,”9

குளிர்ந்த அகழியின் நீர் கலங்க, வாளை மீனை நீர் நாய்த் தன் காலை உணவாக உட்கொள்ளுகின்றன. மனிதர்களால் உருவாக்கப்பட்ட நீர்நிலைகளில் சங்க காலத்தில் மீன் வளர்ப்பு இருந்திருக்கிறது என்று புறநானூற்று குறிப்பிடுகின்றது. அப்போது சங்க காலத்தில் மீன் வளர்த்து அதன் மூலம் அவர்கள் வருவாய் ஈட்டியுள்ளனர்.

“நாயுடை முது நீர்க் கலித்த தாமரைத்

தாதின் அல்லி அவிர் இதழ் புரையும்”10

பழைய நீர்நிலையின்கண் தாமரை, அல்லி போன்ற மலர்கள் செழித்து வளர்ந்து கிடக்கும். அந்நீர்;நிலையில் நீர்நாய் விளையாடுவதாக இப்பாடல் குறிப்பிட்டுள்ளது.

செந்நாய்

செந்நாய்கள் நம் நாட்டின் பல பகுதிகளில் காடுகளில் வாழ்கின்றன. இவைகள் புலி, சிறுத்தை ஆகியவைகளை விடப் பயங்கரமானவை. மான்களின் குறைவிற்குச் செந்நாய்களே காரணம். செந்நாய்கள் கூட்டம் கூட்டமாக வாழ்கின்றன.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :8 /Issue 8/ MAY 2026 E-ISSN 3049-3676 (Online)

இவைகள் மோப்பத்தால் இரையை அறிந்து அதனைத் தேடிச் செல்கின்றன. இவைகள் பகலில் வேட்டையாடுகின்றன.

இவைகள் மான், பன்றி போன்றவற்றைக் கண்டால் இரண்டு அல்லது மூன்று ஒன்று சேர்ந்து இரையை விரட்டுகின்றன. சிறுத்தைகள் இவற்றிக்குப் பயந்து மரத்தின் மீது ஏறி தப்பித்துக்கொள்கின்றன. இந்த நாய்கள் சிறுத்தைக்கும் புலிக்கும் போட்டியாக உள்ளன. "செந்நாய்களின் உடல் நீண்டு மெலிந்துள்ளது கால்களும் மூஞ்சியும் குட்டையாக உள்ளன. இவற்றின் காதுகளின் நுனி வட்ட வடிவமாகவும் வால் சுற்றையாகவும் உள்ளன. பெண் நாயில் 12 அல்லது 14 பால் சுரப்பிக் காம்புகள் உள்ளன. நன்கு வளர்ந்துள்ள செந்நாய் அதன் தோள்பட்டைக்கு அருகில் 43-55 செ.மீ. உயரம் இருக்கிறது. ஒரு நாயின் தலையும் உடலும் சேர்ந்து 90 செ.மீ. நீளமும் வால் 40-43 செ.மீ. நீளமும் இருக்கின்றன. ஆண் நாய் 20 கி.கிராம் எடை இருக்கும்."11 இவற்றின் உடல் முற்றிலும் சிவப்பு நிறமாகவும், வால் மங்கியக் கருப்பாகவும் அதன் நுனி ஆழ்ந்த கருப்பாகவும் உள்ளன. இவைகள் நவம்பர், டிசம்பர் மாதங்களில் கருவுற்று ஜனவரி, பிப்ரவரி மாதங்களில் 4-6 குட்டிகள் போடுகின்றன. இவைகள் குகை அல்லது பாறைகளின் இடைவெளிகளில், அல்லது நிலத் தைப் பரித்து வளைகளில் குட்டி போடுகின்றன. குட்டிகள் பெற்றோருடன் நீண்ட நாட்கள் சேர்ந்துள்ளன. கருதரிக்காத கோடைக் காலங்களிலும், மழைக் காலங்களிலும் பல குடும்பங்கள் ஒன்று சேர்ந்து பெரிய கூட்டமாக வாழ்கின்றன.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்

Volume :8 /Issue 8/ MAY 2026 E-ISSN 3049-3676 (Online)

"மென் புனிற்று அம் பிணவு பசித்தென, பைங் கட்

செந்நாய் ஏற்றை கேழல் தாக்க"12

ஓமை மரத்தில் பருந்து இரைக்காக இளைப்பாறிக் கொண்டிருக்கும். அப்போது அம்மரத்தின் அடியில் பெண் செந்நாய்க் குட்டி போட்டிருக்கும். பருந்து காத்திருக்கும்போது குட்டியை விட்டுவிட்டு அதனால் இரை தேடிச் செல்ல முடியவில்லை. அதனால், பசியைப் போக்க ஆண் செந்நாய் காட்டுப் பன்றியைத் தாக்கி இழுத்துக் கொண்டு வரும். "அத்தக் கேழல் அட்ட நற்கோள்

செந்நாய் ஏற்றை கம்மென ஈர்ப்ப"13

என்னும் வரிகளின் மூலம் தலைவன் வினையை முடித்து சுரவழியில் திரும்பி வருவதைக் தலைவிக் கூறும் பொருட்டு, காட்டிலுள்ள தன் இரையினை நன்கு பற்றவல்ல ஆண் செந்நாயானது பன்றியினைக் கொன்று விரைந்து அதனை இழுத்துச் செல்லும். அவ்வழியில் தலைவன் வருவதை நினைத்து தலைவி வருந்துவதாக இப்பாடல் அமைந்துள்ளது.

"திண்நிலை எயிற்ற செந்நாய் எடுத்தலின்,

வளிமுனைப் பூளையின் ஓய்யென்று அலறிய

கெடுமான் இனநிரை தழிஇய,"14

வற்றிக் கிடக்கும் கிளைகளில் சிலந்திக்கூடு இருக்கும். உலவை மர நிழலில் கானல் நீரை அருந்தி ஏமாந்திருக்கும் பெண்மானை இரும்பை

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :8 /Issue 8/ MAY 2026 E-ISSN 3049-3676 (Online)

அறுக்கும் அரம் போன்ற பற்களை உடைய செந்நாய் துரத்திக் கொல்லும். அக்காட்டின் வழி தலைவன் வருவதை நினைத்து தலைவி வருந்துவதாக இப்பாடல் அமைந்துள்ளது.

“பொன்வார்ந் தன்ன வைவால் எயிற்றுச்

செந்நாய் வெரீ இய புகர்உழை ஒருத்தல்

பொரிஅரை விளவின் புன்புற விளைபுழல்”15

என்னும் பாடல் வரிகள், பொன்னால் செய்யப்பட்டது போலக் கூர்மையான பற்களை உடைய செந்நாய் துரத்தத் தப்பி ஓடிவந்த மான் விளாமரத்து நிழலில் விளாம்பழத்தை உண்ண முயன்று கொண்டிருப்பதாக இப்பாடல் வரிகள் அமைந்துள்ளன.

“காடுதேர் மடப்பிணை அலற, கலையின்

ஓடுகுறங்கு அறுத்த செந்நாய் ஏற்றை

வெயில்புலந்து இளைக்கும் வெம்மைய,”16

என்னும் வரிகளின் மூலம், கூர்மையானப் பற்களால் ஊன் தின்னும் பெண் செந்நாயின் பசியைப் போக்க, ஆண் செந்நாய் காட்டில் திரியும். பெண் மான் அலறும் படி ஓடும். அதன் ஆண் மானின் தசையைப் பிடுங்கிக் கொண்டு சென்று வெயிலின் கொடுமையைத் தாங்கமாட்டாமல் ஆண் செந்நாய் இளைப்பு வாங்கும்; என்று புலவர் கூறுகிறார்.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :8 /Issue 8/ MAY 2026 E-ISSN 3049-3676 (Online)

"துகில் விரித்தன்ன வெயில் அவிர் உருப்பின்
என்றூழ் நீடிய குன்றத்துக் கவாஅன்
ஓய்பசிச் செந்நாய் உயங்குமரை தொலைச்சி"17

என்னும் பாடல் வரிகளானது, வெள்ளைத்துணி விரித்தது போலக் கோடைக்காலத்து வெயில் கொளுத்தும் மலைகளுக்கு இடையேயான பிளவுப் பாதையில் பசிமிக்க செந்நாய் வாடிய மானைக் கொன்று உண்ணுவதாக இப்பாடல் அமைந்துள்ளது.

"பால் அவி தோல் முலை அகடு நிலம் சேர்த்திப்
பசி அட முடங்கிய பைங் கட் செந்நாய்
மாயா வேட்டம் போகிய கணவன்
பொய்யா மரபின் பிணவு நினைத்து இரங்கும்";18

என்னும் பாடல் வரிகளானது, பெண் செந்நாய் நீர் அல்லாத இடத்தில் குட்டியை ஈன்று, ஈரம் பட்டும், பசியோடும் கிடக்கும். பால் இல்லாத வெற்று முலைக் கொண்ட தன் வயிற்றை நிலத்தில் கிடத்திக்கொண்டு கிடப்பதாக இப்பாடல் அமைந்துள்ளது.

"பைங்கட் செந்நாய் படுபதம் பார்க்கும்
ஆரிரு ணடுநாள் வருதி"19

இரவு நேரத்தில் தலைவன் வரும் காட்டுவழிப்பாதையின்

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :8 /Issue 8/ MAY 2026 E-ISSN 3049-3676 (Online)

கொடுமையினைக் கூறும் பொருட்டு, பசிய கண்ணினையுடைய செந்நாய் அகப்படுகின்ற சமயத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும். இருள் செறிந்த நள்ளிரவில் நீ வருகின்றாய் அதை நினைத்து தலைவி இனி இரவில் வராமல் பகலிலே சந்திக்கலாம் என்று தலைவி தோழியிடம் கூறுகிறாள் என்பதாக பாடலின் பொருள் அமைந்துள்ளன.

முடிவுரை

சங்க இலக்கியங்கள் காட்டும் ஐவகை நில அமைப்பில், உயிரினங்களின் உணவுத் தேடல் என்பது இயற்கையின் 'உணவுச் சங்கிலி" விதியைப் பின்பற்றியே அமைந்திருந்தது. மருத நிலத்துப் பொய்கைகளிலும் ஆறுகளிலும் வாழ்ந்த நீர்நாய்கள், வாளை மீன்களைத் தன் விடியற்கால உணவாகக் கொண்டு வாழ்ந்ததையும், தில்லை மரப்பொந்துகளில் தங்கி இன்பமாகத் தூங்கியதையும் நற்றிணை போன்ற நூல்கள் பதிவு செய்துள்ளன. அதேபோல், காடுகளில் கூட்டமாக வாழ்ந்த செந்நாய்கள், தங்களின் கூர்மையானப் பற்களால் மான் மற்றும் பன்றிகளை வேட்டையாடித் தங்களின் பசியைப் போக்கிக் கொண்டன. விலங்குகளின் வேட்டை நுட்பங்கள், உடல் தகவமைப்பு மற்றும் சூழலியல் பின்னணிகளைத் தலைவன் தலைவி வாழ்வியலோடு சங்கப் புலவர்கள் மிக நுட்பமாகச் சித்தரித்திருப்பது, அக்காலத் தமிழர்கள் இயற்கையோடு கொண்டிருந்த ஆழ்ந்த பிணைப்பையும், அவர்களின் கூர்மையானக் கவனிப்புத் திறனையும் புலப்படுத்துகின்றன.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :8 /Issue 8/ MAY 2026 E-ISSN 3049-3676 (Online)

சான்றெண் விளக்கம்

1. http://tamil.thehindu.com/general/environment.

2. சுப்பையன். ப.சி. 1974, இந்திய வனவிலங்குகள், ப - 137, தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை.

3. நாகராசன். வி., முனைவர்., (உ.ஆ), 2017., குறுந்தொகை தொகுதி - 2 (மூ.உ)., பா. 364, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.

4. செயபால். இரா., முனைவர்., (உ.ஆ)., 2017., அகநானூறு தொகுதி - 2 (மூ.உ)., பா. 336, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.

5. மேலது., ப - 386.

6. பாலசுப்பிரமணியன்., கு.வெ., முனைவர்;, (உ.ஆ) 2017., நற்றினை (மூ.உ)., பா. 195, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.

7. மேலது., ப - 390.

8. பாலசுப்பிரமணியன்., கு.வெ., முனைவர்., (உ.ஆ)., 2017., ஐங்குறுநூறு தொகுதி -1 (மூ.உ) பா. 63, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.

9. பாலசுப்பிரமணியன்., கு.வெ., முனைவர்;, (உ.ஆ)., 2017., புறநானூறு தொகுதி-2 (மூ.உ)., பா. 283, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.

10. செயபால்., இரா., முனைவர்., (உ. ஆ) 2017., அகநானூறு தொகுதி - 1 (மூ.உ)., பா. 16, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :8 /Issue 8/ MAY 2026 E-ISSN 3049-3676 (Online)

11. சுப்பையன். ப.சி. 1974, இந்திய வனவிலங்குகள், ப - 139, தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை.

12. செயபால்., இரா., முனைவர்., (உ. ஆ) 2017., அகநானூறு தொகுதி - 1 (மூ.உ)., பா. 21, நியூ சென்சுரி புக் ஹவுஸ், சென்னை.

13. மேலது., ப - 111.

14. மேலது., ப - 199.

15. செயபால். இரா., முனைவர்., (உ.ஆ)., 2017., அகநானூறு தொகுதி -2 (மூ.உ) பா. 219, நியூ சென்சுரி புக் ஹவுஸ், சென்னை.

16. மேலது., ப - 285.

17. பாலசுப்பிரமணியன்., கு.வெ., முனைவர்;, (உ.ஆ) 2017., நற்றினை (மூ.உ)., பா. 43, நியூ சென்சுரி புக் ஹவுஸ், சென்னை.

18. மேலது., ப - 103.

19. நாகராசன்., வி., முனைவர்;, (உ.ஆ), 2017., குறுந்தொகை தொகுதி -1 (மூ.உ)., பா. 141, நியூ சென்சுரி புக் ஹவுஸ், சென்னை.